# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## O.S.No.33/2018

DW–1 ரத்திஷ்குமார் நாள்.09.10.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

நான் என்மனைவிக்கும் சேர்த்துதான் சாட்சியம் அளிக்கிறேன். இந்த வழக்கு எந்த பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியும். 2015ம் ஆண்டு என்மனைவிக்கு தாவா சொத்தை வாதி விற்றது சரி என்று விளம்புகை செய்யக்கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வாதி தனக்கு உரிமையுள்ள சொத்தை விற்றது சரிதான் என்று கூறி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் M.Tech படித்துள்ளேன். ஒருசொத்தை வாங்குவதற்கு முன்னர் என்னென்ன ஆவணங்கள் பார்க்கவேண்டும் என்ற விவரம் எனக்கு ஓரளவுக்கு தெரியும். தாவா சொத்தை வாங்குவதற்கு முன்பு ஆவணங்களை சரிபார்த்தேனா என்றால் வாதி என்னென்ன ஆவணங்கள் கொடுத்தாரோ அதை நான் பார்த்தேன். சொத்தை வாங்குவதற்கு முன்பு வில்லங்கம்போட்டு பார்த்தேன். 1989ம் ஆண்டிற்கு பின்பு 2015ம் ஆண்டுவரை வில்லங்கம் உள்ளதா என்று பார்த்தேன். சொத்தை வாங்குவதற்கு முன்பு நேரடியாக போய் பார்த்தேன். நான் பார்க்கும்போது அது காலியாக இருந்தது. சுற்றி வீடுகள் இருந்தது. தாவா சொத்து ஆதியில் மொத்தம் 1 ஏக்கர் 18 1/2 செண்ட் பொன்னம்மாளுக்கு பாத்தியப்பட்டு இருந்தது என்றால் சரிதான். அந்த சொத்தை அவர் அவருடைய மகன் சுப்ரமணியனுக்கு வா.சா.ஆ.1 மூலம் தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி சுப்ரமணியன் அதன்பிறகு மேற்படி சொத்தை பிளாட்டுகளாக பிரித்து லே அவுட் போட்டார் என்றால்சரிதான். அதன்பின்பு ஒவ்வொரு பிளாட்டையும் தனித்தனியாக அவர் விற்றுவந்துள்ளார் என்றால் சரிதான். தாவா பிளாட்டை வா.சா.ஆ.2 மூலம் ஒரு சுப்ரமணியன் என்பவருக்கு அவர் விற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி கிரயம் வாங்கிய சுப்ரமணியன் 1987 ஆண்டு அதை சரோஜா என்பவருக்கு கிரையம்

கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி சரோஜா வா.சா.ஆ.4 மூலம் அந்த சொத்தை வாதிக்கு கிரயம் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் மூலம் வாதிக்கு சொத்தில் உரிமை இருந்தது என்றால் சரிதான். வாதி மேற்படி சொத்திற்கு முறையான தீர்வை செலுத்திவந்தார் என்றால் முதலில் செலுத்தவில்லை 2011ம் ஆண்டிற்கு பின்னர் செலுத்திவந்தார். 2011ம் ஆண்டிற்கு முன்பு அவர் தீர்வை செலுத்தவில்லை என்பதை காட்ட ஆதாரம் எதுவும் தாக்கல்செய்யவில்லை. 1989 ம் ஆண்டு முதல் வாதி தொடர்ந்து தீர்வை செலுத்தி வந்தார் என்றும், வழக்கிற்காக 2011ம் ஆண்டிற்கு பின்னர் செலுத்தியதாக கூறுகிறேன் என்றால் எனக்கு தெரிந்த விவரத்தை சொல்கிறேன். 1989ம் ஆண்டு முதல் வாதி வரி செலுத்தவில்லை என்று கேட்பு அறிவிப்பு எதுவும் எனக்கு வரவில்லை. வாதி முறையாக வாங்கிய சொத்தை 2015ம் ஆண்டில் எங்களுக்கு விற்றுள்ளார் என்றால் சரிதான். சாட்சி தானாக 2009ம் ஆண்டு முதல் பிரச்சனை இருந்தவிவரம் தெரிந்து வாதி தரப்பில் விற்றதாக கூறுகிறார். என்மனைவி வா.சா.ஆ.10 மூலம் வாங்கிய சொத்தில் பாதியை எனக்கு 2016ம் ஆண்டு வா.சா.ஆ.12 மூலம் தானசெட்டில்மெண்ட் எழுதிகொடுத்தார் என்றால் சரிதான். 2015ம் ஆண்டு கிரயம் வாங்கிய காலம்முதல் தாவா சொத்து எங்கள் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் 2016ம் ஆண்டு வரை இருந்தது. தற்போது யாருடைய அனுபவத்தில் உள்ளது என்றால் யாருடைய அனுபவத்திலும் இல்லை. 2015ம் ஆண்டிற்கு பின்னர் நானும், என்மனைவியும் தாவாசொத்திற்கு தீர்வை செலுத்தவில்லை. என்பெயரிலும், என்மனைவி பெயரிலும் கூட்டுப்பட்டா மாறியுள்ளது. நான் தனியாக உட்பிரிவு எதுவும் செய்யவில்லை. செய்யமுடியவில்லை. நான் உட்பிரிவுக்கு விண்ணப்பித்தேனா என்றால் விண்ணப்பிக்கும்போது அதில் பிரச்சனை உள்ளது என்று சொன்னார்கள். நான் விண்ணப்பிதற்கும் மற்றும் அதை திருப்பியதற்குமான ஆவணம் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் தாவா சொத்திற்கு

சீனிவாசன் த/பெ.கந்தசாமி தான் உரிமையாளர் என்றும், வாதிக்கோ அவருடைய முன்பாத்தியஸ்தர்கோ உரிமையில்லை என்று காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். சீனிவாசன் தான் உரிமையாளர் என்பதை காட்ட நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வட்டாட்சியர் அலுவலக சான்று தாக்கல் செய்துள்ளேன். சாட்சி பிரதிவாதி தரப்பு ஆவணங்களை பார்வையிட்டு இல்லை என்று கூறுகிறார். தன் கைவசம் நகல் இருப்பதாக கூறுகிறார். நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தபின்னர் வாதியை சந்தித்து பணம் கேட்டனா என்றால் புகார் கொடுப்பதற்கு முன்பு 2 முறை வாதியை வீட்டில் சந்தித்து பணம் திருப்பி கேட்டேன். வேறு நபர்களுடன் சேர்ந்து நான் வாதி வீட்டிற்கு சேர்ந்து மிரட்டினேன் என்றால் சரியல்ல. முறையாக கிரயம் பெற்று கொடுத்ததாக வா.சா.ஆ.16 அறிவிப்பை வாதி அனுப்பினார் என்றால் சரிதான். அதை மறுத்து நான் வா.சா.ஆ.17 பதில்அறிவிப்பை அனுப்பினேன் என்றால் சரிதான். வாதி காவல்நிலையம் விசாரணையில் ஆஜராகி ஆவணங்கள் தாக்கல் செய்தவுடன் சிவில் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளும்படி கூறினார்கள் என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகாரின் தற்போதைய நிலை என்று எனக்கு தெரியாது. நான் எதிர்வழக்குரையில் கூறியுள்ளது போன்று சீனிவாசனுக்கும், தாவா சொத்துக்கும் எந்த தொடர்பும் கிடையாது என்றும் வாதி மிரட்டி பணம் பறிக்க எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்வழக்குரையில் கூறியுள்ள சீனிவாசன் பற்றிய விவரம் மற்றும் மற்ற விவரங்கள் பற்றி நிருபண வாக்குமூலத்தில் நான் கூறவில்லை என்றால் சரிதான். நான் நிருபணவாக்குமூலத்தில் புதிதாக சங்கதிகள் கூறுவதால் அதை ஏற்றுக்கொள்ள இயலாது என்றால் சரியல்ல. வாதியின் வழக்கை நான் நிருபணவாக்குமூலத்தில் ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. என்மனைவி தரப்பினர்களை சேர்ப்பதற்காக தாக்கல்செய்த இடைநிலை மனு எண்.3/2022ல் அபிடவிட்டில் வாதியின் முன்பாகஸ்தர்களை பற்றி ஒப்புக்கொண்டுள்ளார் என்றால் சரிதான். சேகர், செல்வராஜ்,

குலோத்துங்கன் ஆகியவர்களுக்கு சொத்தில் எந்த உரிமையும் கிடையாது என்று நிருபணவாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். 2015ம் ஆண்டு ஆவணத்தின் படி தான் செல்வராஜ் உரிமைகோருவதாக நான் கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. 1981ம்ஆண்டு தனக்கு உரிமையில்லாத சொத்தை பொறுத்து சுப்ரமணியன் அவர் மகனான செல்வராஜ்க்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்ததாக நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி செல்வராஜ் அந்த சொத்தை வா.சா.ஆ.15 மூலம் சேகருக்கு கிரயம் கொடுக்க உரிமையில்லை என்று நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சேகர் என்மனைவி கிரயம் வாங்கிய பின்னர் குலோத்துங்கனுக்கு பி.வா.சா.ஆ.9 மூலம் கிரயம் கொடுத்தது செல்லாது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி குலோத்துங்கள், சேகர், செல்வராஜ் மீது நான் தனியாக புகார் கொடுக்கவில்லை. வாதியின் மீது நான் கொடுத்த புகாரின் விசாரணையின் போது அவர்களை விசாரித்தார்கள். நான் மேற்படி 3 நபர்களின் மீது புகார் கொடுப்பதற்கு பதிலாக குழந்தையில்லாமல் தனியாக வசித்துவரும் வாதியை மிரட்டி பணம்பறிக்க புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. சீனிவாசன் என்பவருக்கும் தாவாசொத்திற்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றும், சீனிவாசன் பெயரை சொல்லி வாதி மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. சீனிவாசனுக்கும் சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லாததால் தான் அவரை சேர்க்க நான் மனுசெய்யவில்லை என்றால் சரியல்ல. வாதிக்கு உரிமையுள்ள சொத்தை தான் வாதி எங்களுக்கு கிரயம் கொடுத்துள்ளார் என்றும், வாதிக்கு பிராதில் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்ககூடியது என்றால் வாதிக்கு தாவா சொத்தில் Rights உள்ளது. ஆனால், பிரச்சனை உள்ள சொத்தை விற்றுள்ளார். பிரச்சனை உள்ளது என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வருவாய் கோட்டாட்சியரின் உத்தரவு தாக்கல் செய்துள்ளேன். தாவாசொத்தில் எந்த பிரச்சனையும் கிடையாது

என்றும், குலோத்துங்கன் பிரச்சனை செய்தததால் அவர் மீது நடவடிக்கை எடுக்க பயந்து வாதி மீது புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>**

இல்லை

**3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.